# இந்து நல்வழி மன்றம்



## ஸ்ரீ காஞ்சி பெரியவர்கள் ஸ்ரீமுகம்

**கா**ஞ்சி ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்
சமீபத்தில் விடுத்துள்ள ஸ்ரீமுகத்தில் ஒவ்வோர் ஊரிலும் ''இந்து நல்வழி மன்றம்''
அமைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மன்றம் பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் கூறியிருப்பதாவது: இந்து நல்வழி மன்றம்
ஊர்க் கோயிலுக்கு அருகிலேயே ஒரு கட்டிடத்தில் அமைய வேண்டும். அக்
கட்டடத்தை ஒரு தடுப்பு மூலமாக இரு பிரிவுகளாக்கி, ஒரு பிரிவின் நடுவில்
தாயுமானவர் உருவம் நிறுத்தி, அதைச் சுற்றிப் பெரியபுராண நாயன்மார்களின்
உருவங்களை அமைக்கலாம். அதுபோல மற்றொரு பகுதியில் நடுவில் ஆண்டாளின்
உருவத்தை வைத்து அதைச் சுற்றிலும் ஆழ்வார்களின் உருவங்களை அமைக்க
லாம். ஊர் மக்கள் இம்மன்றத்தில் ஒன்றுசேர்ந்து, பஜனை செய்தல் முதலிய
நற்செயல்களில் ஈடுபட வேண்டும்.

மன்றத்தில் செய்ய வேண்டிய சமயப் பணிகளில் முக்கியமானவை:

ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் உள்ள மக்கள் 'இந்து நல்வழி
மன்றம்' என்ற பெயரில் ஒரு மன்றத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மன்றத்திலும் குறைந்தது பத்து அங்கத்தினர்களாவது இருக்க
வேண்டும்.

இந்துக் குழந்தைகள் எல்லாரையும் மாலையில் தீபம் வைத்தவுடன் கோயி
லுக்கு அழைத்துச் சென்று அரை மணி நேரத்துக்குக் குறையாமல் ஸ்தோத்திரப்
பாடல்கள், பாரதம், ராமாயணம் சொல்லித் தர ஏற்பாடு செய்ய வேண்டும்.

நாள்தோறும் ஒவ்வொரு குடும்பத்திலும் சமையல் செய்ய அரிசி எடுக்கும்
போது ஒரு பிடி அரிசியைத் தர்மத்துக்கென்று ஒரு பாத்திரத்தில் போட்டு
வைத்து அந்த அரிசியை வாரம் ஒரு முறை சேகரம் செய்து அந்த ஊரிலுள்ள
கோவிலில் சமையல் செய்து, பச்சரிசியாக இருந்தால் நிவேதனம் செய்தும் புழுங்
கல் அரிசியாக இருந்தால் நிவேதனம் செய்யாமலும் ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.

ஊரில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரி, நர்ஸிங்ஹோமில் உள்ள நோயாளி
களுக்கு வாரம் ஒருமுறையாவது கோயில்களிலிருந்து பகவத் பிரசாதம் கொண்டு
போய் வழங்க வேண்டும்.

இந்து அநாதைப் பிணங்களை இந்து சம்பிரதாயப்படி அடக்கம் செய்ய
அல்லது தகனம் செய்ய உதவி புரிய வேண்டும்.

ஊருக்கு அருகில் உள்ள சென்ட்ரல், சப்-ஜெயில் இவற்றில் அரசாங்க
அநுமதி பெற்று, வாரம் ஒருமுறையாவது பஜனை, மதச் சொற்பொழிவு நடத்த
ஏற்பாடு செய்ய வேண்டும்.

வசதியுள்ள ஒவ்வொரு வீட்டிலும் பழைய துணிகளைச் சேகரித்துச்
சுத்தம் செய்து ஏழைகளுக்கு வழங்க வேண்டும்.

பள்ளி மாணவர்களை 'முருகா சரணம், வேங்கடேசா சரணம், ஐயப்பா
சரணம்' என ஐந்நூறுக்குக் குறையாமல் எழுதச் சொல்லி டாலர் வழங்கவேண்டும்.

ஊரில் ஜனங்கள் கூடும்படியான சினிமாக் கொட்டகை முன்போ,
கடைவீதியின் முகப்பிலோ, தெரு முகப்பிலோ ஒரு போர்டில் மேல் பாகம் முருகன்
வேங்கடாசலபதி படம் எழுதி, அதன் கீழ் ''புனிதமான மனித ஜன்மம் எடுத்த
அன்பர்களே, ஆயிரக் கணக்கான ஜனங்கள் இவரை வழிபட்டுப் பிரார்த்தனை
செய்து, ஆனந்தமாகவும் துன்பம் நீங்கியும் வாழ்கிறார்கள். ஆகையால் புனித
மான மனிதப் பிறவி எடுத்த நீங்கள் எல்லாரும் இந்தப் பகவானிடம் நம்பிக்கை
யும், விசுவாசமும் வைத்து, உங்கள் பிரார்த்தனையைப் பகவானிடம் செலுத்திச்
சந்தோஷமடைவீர்களாக'' என்று எழுதி வைக்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று வேங்கடாசலபதி, முருகன், ஐயப்பன்
முதலிய படங்கள், டாலர்கள் கொடுக்க வேண்டும்.

பள்ளி மாணவர்களுக்கு நீதி போதனை, தோத்திரப் புத்தகம் கொடுத்து
அவற்றை மனப்பாடம் செய்து ஒப்பிப்பவர்களுக்குப் பரிசுகள் வழங்க வேண்டும்.